# ரஷ்யா

## 3

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

ரோமாபுரியைத் தவிர கம்யூனிஸமோ அல்லது வேறெதாவது ஒன்று ஆளுகைசெய்யும் என்பதற்கு ஒரு வேத வாக்கியத்தையாவது ஆதாரமாகக் காட்டுங்கள் பார்க்கலாம்!

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-03-11 இதுவரை சண்டையிட்டவைகளில் மிகப்பெரிய யுத்தம்

180. ருஷியாவில்... இதை இராணுவத்தில் பணிபுரிந்தவர்களிடம் நன்மைக்காகவும், வேத மாணாக்கராகிய உங்களுக்கும் கூறுகிறேன். நீங்கள் ஏன் ருஷியாவைக் குறித்து சந்தடி செய்தும், சத்தமிட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள்? குண்டு போடப்பட்டால், அதற்கான பாதுகாப்பிடம் ஒன்றை நீங்கள் கட்டவேண்டும் என்று நான் கூற நீங்கள் கேட்டதில்லை. நீங்கள் ஏன் ருஷியாவைக் குறித்து சந்தடி செய்கிறீர்கள்? ருஷியா ஒன்றுமில்லை. அது யுத்தங்கள் ஒன்றும் ஜெயிக்கப்போவதில்லை. அவர்கள் உலகத்தை ஜெயிக்க போவதில்லை. கம்யூனிசம் உலகத்தை ஜெயிக்கப் போவதில்லை. ஜனங்களுக்கு

என்ன நேர்ந்தது? தேவனுடைய வார்த்தை தவறாகுமா?

கவனியுங்கள், இது ஒலி நாடாவில் பதிவு செய்யப்படுகின்றது. நான் இப்பொழுது உலகத்திற்கு அல்லது இந்த ஒலி நாடாக்கள் எங்கெல்லாம் செல்கின்றனவோ. பேசிக்கொண்டிருக்கிறேன்; இங்குள்ள ஜனங்களாகிய நீங்கள், எனக்கு என்ன நேர்ந்தாலும் இதை நம்புங்கள். ருஷியா கம்யூனிஸம் - ஒன்றையும் ஜெயிக்கப்போவதில்லை. தேவனுடைய வார்த்தை ஒருபோதும் தவறாக முடியாது. ரோம மார்க்கமே உலகத்தை ஜெயிக்கப் போகின்றது.

181. நாம் தானியேலின் தரிசனத்தை எடுத்துக்கொள்வோம். அது தேவனுடைய வார்த்தை. தானியேலாகிய நீ - ராஜாவாகிய நேபுகாத்நேச்சாராகிய நீர் இந்த பொன் தலை - பாபிலோன். உமக்கு பின்பு

வேறொரு ராஜ்யம் எழும்பும். அது வெள்ளி (பாருங்கள்?) அது தான் மேதிய - பெர்சிய ராஜ்யம். வேறொன்று கிரேக்க சாம்ராஜ்யம் மகா அலெக்சாண்டர். அடுத்து வருவது ரோமாபுரி" கம்யூனிஸத் தைக் குறித்து அங்கு ஒன்றுமே சொல்லப் படவில்லை. ரோமாபுரி உலகத்தை வென்றது.

இயேசு கிறிஸ்து ரோம சாம்ராஜ்யத்தின் ஆளுகையின்போது பிறந்து, துன்புறுத்தப் பட்டார். அவர் முதலாவதாக ரோம சாம்ராஜ்யத்தின் ஆளுகையின்போது தோன்றினார். அவர் வரப்போகும் அவருடைய இரண்டாம் வருகையின் இந்நேரத்தில், அவருடைய செய்தியானது எல்லாவற்றிற்கும் தாயான ரோம ஸ்தாப னத்தால் துன்புறுத்தப்படுகிறது. அவர் திரும்பிவரும் போது, ரோம சாம்ராஜ் யத்தை அடியோடு ஒழிப்பார். அவர் வந்து

ரோம சாம்ராஜ்யத்தை ஒழிப்பார் என்று யூதர்கள் எப்பொழுதுமே எதிர் நோக்கி யிருந்தனர் கத்தோலிக்க குருக்களாட்சி (heirarchy) உலகத்திலுள்ள எல்லா ஸ்தாப னங்களோடும் இப்பொழுது ஒன்றாக இணைந்து, சபைகளின் சங்கமாக (confederation of churches) தங்களை ஸ்தாபித்துக் கொண்டுள்ளன. எனவே கர்த்தர் உரைக்கிறதாவது, அது ருஷியா வல்ல, அது ரோமாபுரி.

182. ரோமாபுரியைத் தவிர கம்யூ னிஸமோ அல்லது வேறெதாவது ஒன்று ஆளுகைசெய்யும் என்பதற்கு ஒரு வேத வாக்கியத்தையாவது ஆதாரமாகக் காட்டுங்கள் பார்க்கலாம்!

நேபுகாத்நேச்சாருக்குப் பின்பு மேதிய - பெர்சியர் எழும்பினார்களா? நிச்சயமாக. கிரேக்க சாம்ராஜ்யம் அதற்கு பின்பு தோன் றினதா? நிச்சயமாக. ஆம்! அங்கிருந்து

ரோமாபுரி ஆட்சிக்கு வந்ததா? இன்று நம்மிடையே காணப்படுவது போன்று, அது பத்து ஆட்டோமோன் (ottomon) அரசுகளாக உடைந்ததா? இரும்பு என்று அர்த்தம் கொள்ளும் பெயருடைய ஐசன் ஹவரும், களிமண் என்று அர்த்தம் கொள் ளும் பெயருடைய க்ரூஷேவும் இங்கு சந்தித்தனரா? க்ரூ ஷேவ் தன் காலணியைக் கழற்றி, (சகோ. பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறை தட்டுகிறார் - ஆசி) அதை வெளிப்படையான செயலாக்கி, ஜனங்களுக்குக் காண்பிக்க மேசையின் மேல் இப்படி அதை அடித்தாரா? (சகோ. பிரன்ஹாம் பிரசங்க பீடத்தின் மேல் அடித்துக் காண்பிக்கிறார் - ஆசி). சரி, ஜனங்களுக்கு இன்று என்ன நேர்ந்துள்ளது?

183. விசுவாசம் இன்று எங்கு சென்றுள் ளது? நீங்கள் ஏன் தேவனுடைய வார்த்தை

சத்தியமென்று விசுவாசிக்கக் கூடாது? இன்றைய போதகர்களுக்கு என்ன நேர்ந்தது? ஒவ்வொரு போதகரும் கம்யூனிஸத்தை எதிர்த்து போராடுகின்றார். கம்யூனிஸம் ஒன்றுமில்லை! பிசாசு உங்கள் முன்னிலையில் ஒன்றை கட்டிக்கொண்டு வருகிறான். அதை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள். அது ரோம மார்க்கம், ஸ்தாபன மார்க்கம். ரோம் மார்க்கமே எல்லா ஸ்தாபனங்களுக்கும் தாய். வேதம் அவளை வேசியென்றும், ஸ்தாபனங்களை தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாயுள்ள வேசியின் குமாரத்திகள் என்றும் அழைக்கிறது. வீரர்களே, வார்த்தையை கையிலெடுத்துக் கொள்ளுங்கள்... வார்த்தையில் நிலைத்திருங்கள்.

ஒரு நாள் நான் அழிந்து போவேன், ஆனால் இந்த வார்த்தையோ ஒருக்காலும் அழிந்துபோகாது. வாலிபப் பிள்ளைகளே, என் சந்ததியில் இது நடக்காவிட்டால், நீங்கள் அதைக் காண்பீர்கள்.


184. இன்று காலை வானொலி செய்தியைக் கேட்டீர்களா? திருமதி கென்னடி போப் பாண்டவரைக் காணச் சென்றதும், போப் பாண்டவர் என்ன சொன்னார் என்றும் கேட்டீர்களா? பாருங்கள்? உலகிலுள்ள எல்லா மதங்களுமே? ஞாயிறன்று இதைக் குறித்து சற்று அதிகம் பேசலாம்.

185.பாருங்கள்? ருஷியாவைக் குறித்து கவலை கொள்ளாதீர்கள். ருஷியா கடற்கரையிலுள்ள ஒரு சிறு கூழாங்கல். கம்யூனிஸத்தைக் குறித்து கவலை கொள்ளாதீர்கள். ரோம் மார்க்கம் மற்ற சபைகளுடன் ஒன்றாக இணையும்போது, அதை கவனித்து வாருங்கள். கம்யூனிஸம் உலகத்தை ஆளும் என்று வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. மற்றவை எந்த வழியாக சென்றாலும், நான் வார்த்தையின் வழியே செல்கிறேன். நான் வார்த்தையை விசுவாசிக்கிறேன்.

ரோம்மார்க்கம் தான் உலகத்தை கைப் பற்றும், ரோம்மார்க்கம் எல்லா ஸ்தாபனங் களுக்கும் தாய். ரோம மார்க்கம் தோன்று வதற்கு முன்பு ஒரு ஸ்தாபனமும் இருந்த தில்லை. நீங்கள் ஒவ்வொருவரும் அவளை விட்டு வெளியே வரவேண்டு மென்று வேதம் கூறுகின்றது. அவள் வேசிகளுக்குத் தாய்! (இதில் இன்னும் அரைநாள் நிலைத்திருக்க முடியும். ஆனால் நான் நகர்ந்து செல்வது நல்லது).



# ஏழு தரிசனங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 60-11-13 பிரதிநிதித்துவத்தின் மூலம் ஆக்கினை (கலப்பு மார்க்கம்)

13. இப்பொழுது நான்... கடந்த ஞாயிறு இதை இங்கு கூறினேன் என்று நினைக்கிறேன். அதாவது இருபத்தெட்டு ஆண்டுகளாக இந்த பிரசங்க பீடத்தி லிருந்து நான் பிரசங்கம் செய்து வந்திருக் கிறேன். ஆனால் ஒரு முறையாவது நான் அரசியல் விவகாரங்களைக் குறித்து பேசினதில்லை. ஆனால் கடந்த ஞாயிறு வரை, உங்கள் வாக்குகளை செலுத்த நீங்கள் செல்வதற்கு முன்பு ஜெபம் செய்து விட்டு செல்ல உங்களைக் கேட்டுக் கொண் டேன். அன்றொரு நாள் நான் சகோதரன். ரைட் வீட்டுக்கு சென்றிருந்தேன். என்னை அதிக காலமாக அறிந்தவர்களில் அவர் ஒருவர் - அவரும், சகோதரன். ராய் ஸ்லாட்டரும் இன்னும் சிலரும் என்னை

அநேக ஆண்டுகளாக அறிந்துள்ளனர். ஆனால் யாருக்கு என் வாக்கை செலுத்தி னேன் என்று அவருக்குத் தெரியாது. நான் டிமாக்கராட் கட்சியை சேர்ந்தவனா, ரிப்பப்ளிகன் கட்சியை சேர்ந்தவனா என்று. சகோதரன், ரைட்டின் வீடு எனக்கு இரண் டாம் வீடு போல். (சகோதரன் ரைட் "நாம் ஒன்றாக சவாரி செய்தோம், ஒன்றாக ஜெபித்தோம், எல்லா இடங்களிலும், ஆனாலும் நான் யாருக்கு வாக்கு செலுத்தி னேன் என்று நீங்கள் கேட்கவேயில்லை, அவ்வாறே நானும் உங்களை கேட்க வில்லை", என்று கூறுகிறார்... ஆசி.) அது முக்கியமில்லாத ஒன்று, ஆகையால் தான் சகோ. ரைட் (யாரோ ஒருவர் "சகோதரன் பில், அதே காரியத்தைத் தான் நானும் கூறுவேன்"என்று கூறுகிறார்... ஆசி.) உங்களுக்கு நன்றி. உங்களுக்கு நன்றி. நான் யாரிடமும்... நான் யாருக்கு வாக்கை செலுத்தினேன் என்று எவருக்குமே

தெரியாது. ஏனெனில் இரண்டு கட்சிகளில் எந்த கட்சியும் பெருமையடித்துக் கொள்ள முடியாது.

14. ஆனால் சென்ற வாரம் அவ்வாறு நான் கூறக் காரணம், அரசியலைக் காட்டிலும் அதிகம் அதில் அடங்கியுள்ளது. அளிக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசனத்தை உங்களுக்கு படித்துக் காண்பிக்க போகிறேன். என்னிடம்... திரு. மெர்சியரும் மற்றவர்களும் இந்த பழைய தீர்க்க தரிசனங்களையெல்லாம் தோண்டி யெடுத்து, அவைகளை சரியாக அமைத்து, புத்தக வடிவில் வெளியிடப் போகிறார்கள்.

நீங்கள் அறிய வேண்டுமென்று நான் விரும்பும் சிலவற்றை உங்களுக்கு படித்து காண்பிக்கப் போகிறேன். (இது முதலாவ தாக) உங்களுக்கு சிலவற்றை படித்துக் காண்பிக்க விரும்புகின்றேன். "1932-ம்" ஆண்டில், இதை கேளுங்கள் ”நான்

போய்க் கொண்டிருந்த போது... இன்று காலை நான் சபைக்கு செல்ல ஆயத்த மாகிக் கொண்டிருந்த போது, எனக்கு தரிசனம் உண்டானது. எங்கள் ஆராதனை மெய்க்ஸ் அவன்யூவிலுள்ள வயோதிப அனாதைகள் விடுதியில் நடைபெறுகிறது'' அந்த கட்டிடத்தின் ஒரு பாகத்தில் சார்லி கெர்ன் வசிக்கிறார் (அவர் இப்பொழுது தெருவின் மறுபுறத்தில் வசிக்கிறார்).

"இந்த தரிசனத்தில் சில பயங்கரமான நிகழ்ச்சிகள் நடப்பதைக் கண்டேன். இதை நான் கர்த்தருடைய நாமத்தில் உரைக்கி றேன்". "இப்பொழுது ஜனாதிபதியாக உள்ள பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட்" (ஞாபகம் கொள்ளுங்கள், இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த தரிசனம் உண்டானது) ''முழு உலகமும் யுத்தத்தில் ஈடுபடும்படி செய்வார். இத்தாலி நாட்டின் புது சர்வாதிகாரி முசோலினி, எத்தியோப்

பியாவின் மீது தன் முதல் படையெடுப்பை தொடுத்து அதை கைப்பற்றுவான். ஆனால் அதுவே அவனுடைய கடைசி வெற்றியா யிருக்கும். அவன் தன் முடிவை அடை வான்“.

15. ''நாம் ஜெர்மனி தேசத்துடன் போரில் ஈடுபடுவோம். ரஷியாவை கவனி யுங்கள்! (அது... இப்பொழுது) கம்யூ னிஸம், நாஸிஸம், பாஸிஸம். ரஷியாவை கவனியுங்கள்! ஆனால் முக்கியமாக கவனிக்க வேண்டியது அதுவல்ல“.

“மேலும்... இந்த தேசத்தில் ஒரு பொல்லாத காரியம் நடந்துள்ளது. பெண் கள் வாக்குகளை செலுத்த அவர்கள் அனுமதித்துள்ளனர். இது ஒரு ஸ்திரீயின் தேசம். ஏவாள் ஏதேனை மாசுபடுத்தினது போல், இவள் இந்த தேசத்தை மாசுபடுத் துவாள்.” நான் ஏன் இப்படி ஆணித்தர மாகக் கூறுகிறேன் என்று உங்களுக்கு

புரிகிறதா? நான் கர்த்தர் உரைக்கிறதாவது என்பதைப் பெற்றிருக்கிறேன். “அவளுடைய வாக்குகளைக் கொண்டு அவள் தவறான ஆளைத் தேர்ந்தெடுப்பாள்”. “ஜெர்மனி கட்டப் போகும் ஒரு பெரிய கான்கிரீட் மதிலின் அருகில் அமெரிக்கர்கள் பயங்கரமாக முறியடிக்கப்படுவார்கள்.” அது மகிசாட்லைன் (அது கட்டப்படுவதற்கு பதினேோறு ஆண்டுகளுக்கு முன்பு). “ஆனால் முடிவில் வெற்றி பெறுபவர் அமெரிக்கர்களே.”

“இந்த ஸ்திரீகள் தங்கள் வாக்குகளின் மூலம் தவறான ஆளைத் தேர்ந்தெடுத்த பிறகு, ஒரு பெரிய ஸ்திரீ அமெரிக்க ஐக்கிய நாடுகளில் எழும்பக் கண்டேன். அவள் சிறப்பாக உடுத்தியிருந்தாள், அழகாயிருந்தாள், ஆனால் இருதயத்தில் கொடூரமுள்ளவளாயிருந்தாள். அவள் இந்த தேசத்தை அழிவுக்கு நடத்துவாள்.

”நான் இவ்வாறு அடைப்பு குறிகளில் குறிப்பு எழுதி வைத்துள்ளேன்“, (”ஒருக் கால் அது கத்தோலிக்க சபையாக இருக்கக் கூடும்“).

“மட்டுமின்றி, விஞ்ஞானம் அதிகமாக முன்னேறும், முக்கியமாக இயந்திரத் துறை யில், மோட்டார் வாகனங்கள் முட்டை வடிவில் தயாரிக்கப்படும். முடிவில் காரோட்டும் சக்கரமே அவசியமில்லாத ஒரு மோட்டார் வாகனத்தை அவர்கள் தயாரிப்பார்கள்.” அப்படிப்பட்ட வாகனம் இப்பொழுதுள்ளது. “அது ஏதோ ஒரு சக்தியால் இயங்கும்.”

“பின்பு நான் அமெரிக்க ஐக்கிய நாடுகளை புகைக்காடாக, எரிந்து போன இடமாகக் கண்டேன். அது முடிவுக்கு அருகில் நடக்கும்''.



# கிறிஸ்துவே நம்முடைய அடைக்கலமானவர்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 62-0123 எல்லாவற்றையும் விட்டுவிடுதல்

அணுகுண்டு தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்ள பூமிக்கு அடியில் மக்கள் அமைத்திருக்கும் அணுகுண்டு வெடி புகலிடத்தைக் குறித்து மிக அதிகமாக அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

ஓ, என்னே! நாமும் ஒன்றைக் கொண்டிருக்கிறோம். அது சரி.

அணுகுண்டு வெடி புகலிடம், பூமியில் ஒரு துளையைப் போட்டு அதனுள்ளாகச் செல்லுதல், மேலும் அவர்கள், "அந்த அணு குண்டுகள் பூமியின் மீது விழுந்து சுமார் நூற்று ஐம்பது அடி ஆழமும் சுமார் நூற்றுச் சொச்சம் மைல்கள் அளவிற்கு அகலமும் கொண்ட ஒரு பெரிய துளையை உருவாக்கும்" என்று என்னிடமாகக் கூறினார்.

என்ன, நீங்கள் பூமிக்கு அடியில் அரை மைல் தூர அளவிற்கு கீழே இருந்தாலும் உங்கள் ஒவ்வொரு எலும்பையும் அது நொறுக்கிப் போடும். நிச்சயமாக, அது எந்த இடத்திலும் அவ்விதம் செய்யும்.

ஆனால் நமக்கு ஒரு புகலிடம், அடைக்கலம் இருக்கிறது. கிறிஸ்துவே நம்முடைய அடைக்கலமானவர். ஆமென்.

68. அன்றொரு இரவு நான் கூறினது போன்று, ரஷியா தன்னுடைய மகத்தான காரியத்தைக் குறித்து பெருமை பாராட்டிக் கொண்டிருந்தது. “நாங்கள் முதன் முறையாக ஒரு மனிதனை விண்வெளிக்கு அனுப்பியுள்ளோம்” என்று அவர்கள் கூறிக்கொண்டிருந்தனர்.

அந்த கருத்துடன் நான் வேறுபடுகின்றேன். இரண்டாயிரம் ஆண்டுகளாக நாம் ஒருவரை விண்வெளியில் கொண்டிருக்கின்றோம். ஆமென். அது சரியே. ஆம் ஐயா. ஒரு மத்தியஸ்தர். ஆம் ஐயா, அவர்

பரலோகத்துக்குள்ளாகச் சென்று அரை நொடிப் பொழுதில் திரும்ப வருகின்றார்.

நிச்சயமாக, நாம் ஒரு மனிதனை விண்வெளியில் கொண்டிருக்கின்றோம். அவர்களுக்கு எதுவுமே இல்லை. ஆம், ஐயா, அது சரி, நாம் காண்பது என்ன வென்றால் அவருக்கு ஒரு ... அவர் நம்மெல்லாருக்கும் புகலிடமாக ஆக வேண்டியதாக இருந்தது.

---



“ஓ, ரஷ்யாதான் அந்திகிறிஸ்து” என்று இப்பொழுது அவர்களில் சிலர் கூறுகின்றனர். இல்லை! ரஷ்யா அந்திகிறிஸ்து அல்ல. கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் முட்டாளாக்கும் விதத்தில் அந்திகிறிஸ்து மிகவும் பக்திவாய்ந்தவனாக இருக்கப் போகிறான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 53-06-09A பிசாசியல் #2

214. பிசாசுகளைக் குறித்து நான் என்ன குறிப்பிடுகின்றேன் என்பதை உங்களால் காணமுடிகின்றதா? அவைகள் கிரியை செய்து கொண்டிருக்கின்றன. அவை மிகவும் பக்தியுள்ளவைகளாக இருக்கின் றன, மிக பக்தியுள்ளவைகளாக! ஓ, அவர்கள் ஒவ்வொரு ஞாயிறும் சபைக்குச் சென்று அப்போஸ்தருடைய பிரமாணங் களை திரும்பத்திரும்ப உச்சரித்து, துதிப் பாடலைப் பாடுகின்றனர். ஓ, என்னே, இருப்பதிலேயே மிக பக்தியுள்ளவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர்.

“சகோதரன் பிரன்ஹாமே, அது தான் சத்தியமா?”

215 இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது அந்த விதமான ஆவியே தான். இயேசு, “நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள்” என்று கூறினார்.

216. “ஓ, ரஷ்யாதான் அந்திகிறிஸ்து” என்று இப்பொழுது அவர்களில் சிலர் கூறுகின்றனர். இல்லை! ரஷ்யா அந்தி கிறிஸ்து அல்ல. கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் முட்டாளாக்கும் விதத்தில் அந்திகிறிஸ்து மிகவும் பக்திவாய்ந்தவனாக இருக்கப் போகிறான்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் முன்பு ரஷ்யாவோடு இணைந்தபோது அதையே, அதே அனுபவத்தையே அதே தவறை செய்தது. அந்த நேரத்தில் அவர்கள் கிட்டத்தட்ட யுத்தத்திற்கு தயாராக இருந்தனர், ரஷ்யாவோடு தங்களை இணைத்துக்கொண்டனர். இப்பொழுது நமக்கு என்ன கிடைத்தது என்று நீங்கள் பார்க்கிறீர்களா, நீங்கள் காணவில்லையா? அவர்கள் நம்முடைய ஆகாய விமானங்களையும், நம்முடைய எல்லா ரகசியங்களையும், நம்முடைய அணுகுண்டுகளையும் பெற்றுக்கொண்டு, அதை திருப்பி நம் மீது வீசுவதற்கு அங்கே ஒவ்வொரு காரியமும் உள்ளது.

**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து**

## செய்தி: 54-05-09 அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆக்கிரமிப்பு

96. இந்த பெரிய மனிதன் அங்கே உற்சாகத்தில் எப்படி கீழே இறங்கிவிட்டான். அவன் தன்னை வெதுவெதுப்பான வைகளோடு, எல்லைக்கோடுகளோடும் இணைத்துக்கொண்டு, அவன் ஏதோ பெரிதான ஒன்றை செய்து கொண்டிருப்ப தாக எண்ணிக் கொண்டு, தேவன் தன்னை ஆசீர்வதித்து கொண்டிருந்தார் என்று எண்ணிக்கொண்டான். மேலும் அது சரி என்று தெரியாமல், அப்பொழுது அவன் இந்த எல்லா குழுவையும் தன்னோடு கொண்டு வந்து கொண்டிருந்தான். என்ன? “இங்கே யூதா, நம்முடைய சிறிய குழு, இஸ்ரவேலின் பெரும் படைகளோடு வந்து தங்களை இணைத்துக்கொள்ளும். நாம்

என்ன ஒரு வல்லமையான ஜனங்களாய் இருப்போம்."

97. அங்கு தான் உங்கள் காரியமே உள்ளது. அதுதான் அந்திக் கிறிஸ்துவை உள்ளே கொண்டு வர எப்பொழுதும் பிசாசு பயன்படுத்திக் கொண்டிருக்கிற வஞ்சகத்தின் முறையாய் உள்ளது; நான் இதற்கு உறுதுணையாக நின்று கொண் டிருப்பதுபோலவே. "நாம் நம்முடைய முயற்சிகளை ஒன்றாக இணைப்போம்." நம்மால் அதை செய்ய முடியாது. இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய, அவர்கள் எப்படி ஒருமித்து நடந்துபோக முடியும்?

98. **அமெரிக்க ஐக்கிய நாடுகள் முன்பு ரஷ்யாவோடு இணைந்தபோது அதையே, அதே அனுபவத்தையே அதே தவறை செய் தது. அந்த நேரத்தில் அவர்கள் கிட்டத்தட்ட யுத்தத்திற்கு தயாராக இருந்தனர், ரஷ்யா**

**வோடு தங்களை இணைத்துக்கொண்டனர். இப்பொழுது நமக்கு என்ன கிடைத்தது என்று நீங்கள் பார்க்கிறீர்களா, நீங்கள் காணவில்லையா? அவர்கள் நம்முடைய ஆகாய விமானங்களையும், நம்முடைய எல்லா ரகசியங்களையும், நம்முடைய அணு குண்டுகளையும் பெற்றுக்கொண்டு, அதை திருப்பி நம் மீது வீசுவதற்கு அங்கே ஒவ்வொரு காரியமும் உள்ளது.** அதே காரியமே ஆவிக்குரியப்பிரகாரமாகவும் செல்கிறது.

99. யோசபாத் இந்தக் கூட்டணியை அமைத்துக் கொண்ட பிறகு, அதன் பின்னரே அவர்கள் கலந்தாலோசித்தனர் என்பதை, நாம் கண்டறிகிறோம்.

நமக்கு ஒரு மறைவிடம் இருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ‘கர்த்தருடைய நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்.’ எத்தனை குண்டுகளோ அல்லது மற்ற எதுவுமோ போடப்பட்டாலும் கவலையில்லை, நாம் அங்கே பாதுகாப்பாக இருக்கிறோம்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 56-11-25 M பயன்படுத்தப்பட்ட ஓர் சால்வை

மேலும் நாம்... எவருக்கும், அல்லது நாம் எப்போதும் வாழ்ந்ததிலேயே எந்த காலத்தைக் காட்டிலும் இந்த நேரமானது மகத்தான நேரமாக உள்ளது. இது அசைக்கப்படும் ஒரு நேரமாகும். பாவிகளுக்கு இது ஒரு கலக்கத்தின் நேரமாகும். ஆனால் இது கிறிஸ்தவர்களுக்கோ ஒரு அற்புதமான நேரமாகும், ஏனெனில் நம்முடைய கடைசி கொஞ்சம் முயற்சிகளைச் சேர்த்து மூட்டை கட்டி அல்லது ஒன்றாக சேர்த்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று கர்த்தரை சந்திக்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இப்பொழுது, நீங்கள் சுற்றிலும் நோக்கிப் பார்க்கும் போது, இன்றைய ஜனங்கள்

தேசம் எதிர்கொண்டுள்ள பெரும் கலக்கத்துடனும், வியாகுலத்தோடும் இருப்பதைப் பாருங்கள்,...

9. ஒரு சில இரவுகளுக்கு முன்பு, நான் யாரோ ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் அரசாங்கத்தின் பிரதிநிதியாய் வேலை பார்க்கும், இங்கே கவனித்துக் கொண்டிருக்கும் அவர்களில் ஒருவராக இருந்தார், அவர்கள், 'சகோதரன் பிரன்ஹாமே, அந்த குண்டானது தாக்கும் போது, தரையில் ஜன்னலிலிருந்து விலகி, இனிமேல் படுங்கள் என்றோ அல்லது கட்டிடத்தின் அடித்தளத்திற்குப் போக வேண்டாம் என்றோ ஜனங்களுக்கு ஆலோசனை கூற வேண்டாம் என்று அரசாங்கத்தால் நாங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளோம், ஏனெனில்

இந்த புதிய குண்டானது மாஸ்கோவிலிருந்து லூயிவில்லிலுள்ள நாலாவது தெருவுக்கு ரேடியோ மூலமாக செலுத்தப்பட்டு சரியாக அத்தெருவைத் தாக்க முடியும்; இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட அது செலுத்தப்பட்டு, அது வெடித்து, அநேக ஆயிரக்கணக்கான, அநேக ஆயிரக்கணக்கான பேரின் உயிரை வாங்க முடியும், நட்சத்திரங்கள் மற்றும் ராடாரினால் அது செலுத்தப்பட்டு, ரஷ்யாவுலுள்ள மாஸ்கோவிலிருந்து லூயிவில்லிலுள்ள நாலாவது தெருவின் மேல் அது மிகவும் சரியாக வந்து விழும். அது தாக்கும் போது, அவ்வாறு செய்ய வேண்டாம்...?... விமானத்தையோ அல்லது எதையுமே பயன்படுத்த வேண்டாம், அது இங்கிருந்து சுடப்பட்டு, சரியாக அங்கே சென்று சேரும். அது பூமியில் ஒரு பெரிய துளையை

உண்டாக்கும்... 175 அடி ஆழமும் 15 சதுர மைல் பரப்பளவும் கொண்ட ஒரு பள்ளத்தை உண்டாக்கும்: பதினைந்து சதுர மைல்கள்' என்றனர்.

அந்த சமயம் வரும்போது, செய்ய வேண்டிய ஒரே காரியம் என்னவெனில், விமானத்தின் மேல் மாடியில் (flight upstairs) செல்வதைத் தவிர வேறொன்றுமில்லை. **சற்று சிந்தித்துப் பாருங்கள், அவர்கள் விரும்பினால், ஒரே நேரத்தில் அவைகளில் 50 குண்டுகளையோ அல்லது 100 குண்டுகளையோ வீச முடியும். அங்கிருந்து இங்கே அந்த குண்டுகளை வீசி, எல்லாவற்றையும் முழுவதுமாக அழிக்க ஆகும் நேரம் 60 அல்லது 80 நிமிடங்கள், அல்லது சரியாகச் சொன்னால், 60 அல்லது 80 நொடிகள் தான் என்று நம்புகிறேன். லூயிவில்லுக்கும் ஹென்றிவில்லுக்கும் இடையே மற்றும் லூயிவில்லுக்கும்**

பார்ட்ஸ்டௌனுக்கும் இடையே அல்லது அங்கே, பூமியில் பள்ளம் ஏற்பட்டு, அதில் ஒரு குவியல் தூசியைத் தவிர வேறொன்றும் விடப்பட்டிருக்காது; அவ்வளவு தான் விடப்பட்டிருக்கும், அந்த பிரதேசத்தின் அருகிலும் அதற்கு அப்பாலும் மைல் கணக்காக, மைல்கள் கணக்காக, மைல்கள் கணக்காக அதற்கப்பாலும் எல்லாம் எரிந்து போய் விடும். அங்கே ஒன்று இடிந்து விழும்போது, அதற்கு மேல் வேறொன்று அங்கே எங்கேயோ அதை சந்திக்கத்தக்கதாக இடிந்து விழும்.

10. **நமக்கு ஒரு மறைவிடம் இருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். 'கர்த்தருடைய நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்.' எத்தனை குண்டுகளோ அல்லது மற்ற எதுவுமோ போடப்பட்டாலும் கவலையில்லை, நாம் அங்கே பாதுகாப்பாக**

இருக்கிறோம். எனவே இந்த மறைவிடம் அல்லது இந்த புகலிடமானது, இந்த உலகத்திற்கோ பாவிகளுக்கோ கிடையாது. இது ஒரு அசைக்கும் நேரமாக உள்ளது. நான் ஒரு கிறிஸ்தவனாக இல்லாதிருந்தால், எந்த நேரத்தில் எது சம்பவிக்குமோ என்று எண்ணிக்கொண்டு பித்து பிடித்தவனாய் இருந்திருப்பேன் என்று நம்புகிறேன். வீடு முழுவதும் சிறு பிள்ளைகளும் மற்றும் ஒவ்வொன்றும் இருக்கையில், என்ன செய்ய வேண்டுமென்று எனக்கு தெரியாது. ஆனால் நான் என்னுடைய வீட்டில் நின்று, எந்த குண்டுகளும் வேறு எதுவும் தொட முடியாத ஒரு மறைவிடத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்த முடிவதற்காக மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தராகிய இயேசுவின் பாதுகாக்கும் செட்டைகளின் கீழே. ‘பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று கர்த்தர்

**சொல்லுகிறார்.' பாருங்கள்? அதுவே நம்முடைய பாதுகாப்பு.**

**ஜீவியத்தின் எல்லா பாவங்களும், போராட்டங்களும், சோதனைகளும் சீக்கிரமாய் போய் விடும் என்று அறியும்படியான இந்நேரம் என்ன ஒரு மகத்தானதும் மகிமையானதுமான நேரமாக உள்ளது ! இந்நாட்களில் ஒன்றில் எல்லாம் முடிந்து விடும். நாம் கர்த்தருடன் இருக்கும்படி வீட்டிற்கு போய் விடுவோம்.** இப்பொழுது, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் நம்மால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு பேரை இந்த மகத்தான கோட்டைக்குள் கொண்டுவரும் படியான நேரம் தான் மிச்சமுள்ளது.



# அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகமாகிய இந்த யூபிலியின் செய்தியை ஏற்றுக்கொள்ள தவறினதினாலே, தேவனுடைய பார்வையில் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டிருக்கிறார்கள்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-10-03E யூபிலி ஆண்டு

89. இப்பொழுது பரிசுத்த ஆவியான வரின் அபிஷேகமானது பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு முதன் முறையாக ரஷ்யாவில் நூறு வருடங்களுக்கு முன்பாக வந்தது. அது உண்மை. சரித்திரம் அப்படித் தான் சொல்லுகிறது. அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை நூறு வருடங்களுக்கு முன்பாக பெற்றிருந்தார் கள். அற்புதங்களும் அடையாளங்களும் நடந்தது. இருப்பினும் ஒரு தேசமாக அதை நிராகரித்து ஒதுக்கி தள்ளிவிட்டனர். அப்படி செய்ததினாலே அவர்கள் தேவனை எதிர்க்கிறவர்களாகவும், மார்க் கத்தை எதிர்க்கிறவர்களாகவும், மற்றும் உணர்வற்ற கொடுமையான இருதய முடைய கம்யூனிஸ்ட்காரரர்களாக இப்பொ ழுது மாறிப்போனார்கள். நீங்கள் தேவ

னுக்கு செவிசாய்க்காமல் போவீர்களானால் அவர் உங்களை குற்றம்சாட்டுகின்ற ஆவியினிடத்திற்கு ஒப்புக் கொடுப்பார். அப்போது நீங்கள் பொய்யை நம்பி கேடான சிந்தையுள்ளவர்களாக மாறி ஆக்கினைக்குள்ளாவீர்கள். அதுதான் ரஷ்யாவின் இன்றைய நிலை. அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகமாகிய இந்த யூபிலியின் செய்தியை ஏற்றுக்கொள்ள தவறினதினாலே, தேவனுடைய பார்வை யில் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டிருக் கிறார்கள். கேடான சிந்தையுடையவர்களா னார்கள். பொய்யை நம்பி தேவனுடைய பார்வையில் ஆக்கினைக்குள் தீர்க்கப்பட் டிருக்கிறார்கள்.

90. அடுத்ததாக அது எங்கே வந்தது என்று பாருங்கள் துருக்கி தேசத்தின் மேலாய் வந்தது. துருக்கியர்களும் அதை நிராகரித்தனர். அவர்கள் ஆர்மேனிய மக்களை நூறு நூறு பேராக சிலுவையில்

அறைந்தும், பெரிய தொட்டிகளில் தூக்கிப் போட்டும், பட்டயத்தினால் குத்தியும் மற்றும் இது போன்று அவர்களை கொன் றனர். துருக்கியின் நிலை இன்றிரவு எப்படி இருக்கிறது என்று பாருங்கள். அவளையும் கடந்து போனார்.

91. இப்பொழுது என் சகோதரனே, அமெரிக்கா, கடந்த நாற்பது வருடங்களாக இந்த பண்டைய கால யூபிலி வருடத்தின் அப்போஸ்தல பிரசங்கத்தை பெற்றிருக் கிறது. அமெரிக்கர்கள் இதை ஒரு தேசமாக ஏற்றுக்கொள்ள வில்லையென்றால்; அவர் கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் போவார் களோ என பயப்படுகிறேன்; அப்போது வெளியே தள்ளப்பட்டு, முற்றிலும் விசுவாச துரோகத்தின் அந்தகாரத்திற் குள்ளாக முத்திரிக்கப்படுவார்கள். நாம் கொண்டிருக்கிற ஸ்தாபனங்கள் எல்லாம் சரிதான். ஆனால் சகோதரனே, தேவன் ஸ்தாபனங்களை நோக்கிப் பார்க்கவில்லை

தனிப்பட்ட நபர்களையே நோக்கிப் பார்க்கிறார். கிறிஸ்தவம் என்பது ஒரு ஸ்தாபனம் அல்ல, கிறிஸ்தவம் என்பது ஒருதனிப்பட்ட நபர் ஜீவிக்கும் ஜீவியத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. ஆமென்.

92. இதோ, தேவனுடைய வார்த்தையின்படி பரிசுத்த ஆவியானவர் உரைக்கிறதாவது, ஓர் நாளிலே, அமெரிக்கா முழுவதுமாக தேவனை நிராகரித்து, வெளிப்படுத்தல் 13-ம் அதிகாரத்தின்படி மிருகத்தின் முத்திரையை ஏற்றுக்கொள்ளும். நாம் சரியாக அந்த நிலைக்குத் தான் போய்க் கொண்டிருக்கிறோம். தேவன் எந்த ஒரு தேசத்தையும்...

93. தேவன் எந்த ஒரு தேசத்திற்காகவும் எந்த ஒரு மக்களுக்காகவும் முக்தாட்சண்ணியம் பார்க்கமாட்டார். 'அவரை விரும்புகிற யாவரையும்' அவர் ஏற்றுக்கொள்கிறார். ஏதாவது ஒரு தேசம் எழும்பி, இந்த எல்லாக் காரியத்தையும் செய்து அதிலே

தரித்திருக்கும் என்றால், அதினுடைய ராஜ்யம் என்றென்றுமாய் நிற்கும். ஆனால் கைகளால் பெயர்க்கப்படாத கல்லானது மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வரும் பொழுது,

94. அது உலகத்திலுள்ள ஒவ்வொரு ராஜ்யத்தையும் உடைக்கும். அது எல்லா உலக ராஜியங்களையும் துண்டு துண்டாக உடைக்கும். அப்பொழுது கிறிஸ்து ராஜா வாக ஆளுகை செய்வார். அது முதல் அவருடைய ராஜ்யத்திற்கு முடிவிராது. “அவர் நாமம் ஆலோசனைக் கர்த்தர், சமாதானப் பிரபு, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா எனப்படும். கர்த்தத்துவம் (ஆளுகை) அவர் தோளின் மேல் இருக்கும்” ஆகவே அந்த ராஜ்யத்திற்கு முடிவிராது. அதுவே தேவன் வல்லமை யிலும் முழு பெலத்தோடும் வர இருக்கிற ராஜ்யமாய் இருக்கிறது. அப்போது உலகத்

தின் மற்றெல்லாக் காரியமும் உடைந்து நொறுங்கி சிதறுண்டுபோகும்.

அவர்கள் அதை நிராகரிக்கப் போகிறார்கள். தேசங்கள் அதை நிராகரிக்கும். சபைகள் அதை நிராகரிக்கும். தனிப்பட்ட நபர்கள் அதை நிராகரிப்பார்கள். அப்பொழுது மாத்திரமே தேவனால் தேசங்களை நியாயந்தீர்க்க முடியும். அப்பொழுது மாத்திரமே, அவரால் சபைகளை நியாயந்தீர்க்க முடியும். அப்பொழுது மாத்திரமே, அவரால் தனிப்பட்ட நபர்களை நியாயந்தீர்க்க முடியும். சத்தியத்தை கேட்டு அதிலே நடக்கத் தவறுகிற எந்த மனிதனும். வேதவாக்கியத்தின்படி, தேவனுடைய பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக தேவதூஷணம் உரைக்கிறவனாக இருக்கிறான். ஆகவே அதை நிராகரித்தபடியால் அவனுடைய மீட்பின் நாளை அவன் கடந்து போனவனாக இருக்கிறான்.

95. நண்பர்களே நீங்கள் இங்கு வந்து இங்கே பெற்றுக் கொள்ளுகிற காரியங்கள் யாவும்.... நாம் இங்கே நல்ல அருமையான மிகச்சிறந்த உடைகளை உடுத்துகிறோம். சொல்லப்போனால், உலகிலேயே மிகச் சிறப்பாய் உடை உடுத்துகிறவர்கள் அமெ ரிக்கர்கள் தான். உலகத்திலே நன்றாக போஷிக்கப்படுபவர்களும் அமெரிக்கர் களே. மிகச்சிறந்த வாகனங்களை ஓட்டு கின்றவர்களும் அமெரிக்கர்களே. யாரைக் காட்டிலும் அவர்களிடமே அதிகப் பணம் இருக்கிறது. அது சரிதான். உலகத்திலுள்ள எல்லா சிறந்த காரியங்களையும் நாம் கொண்டிருக்கிறோம். உலகத்திலுள்ளவை களிலேயே சில சிறந்த திருச்சபைகள் நம்மிடம் தான் இருக்கிறது. உலகத்திலுள்ள வைகளிலேயே சில சிறந்த மக்கள் நம்மி டையே இருக்கின்றனர். நாம் இவைக ளெல்லாம் கொண்டிருந்த போதிலும், ஒரு தேசமாக நாம் முழுமையாய் தேவனை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாய் விலகிப்

போய்க் கொண்டிருக்கிறோம். காரணம் என்னவென்றால் நாம் ஒரு தனிப்பட்ட நபர்களின் மேலாகச் சார்ந்துள்ளோம். ஸ்தாபனங்களின் மேல் சார்ந்துள்ளோம். தேசங்களின் மேல் சார்ந்துள்ளோம்.

96. சமீப நாட்களில் நான் ஒருவரிடம் “நீர் கிறிஸ்தவரா”, என்று கேட்டேன்.

97. அதற்கு அவர், “நீர் புரிந்துக் கொள்ளும்படி இதைச் சொல்லட்டும், நான் ஒரு அமெரிக்கன். நான் கிறிஸ்தவ தேசத்தைச் சேர்ந்தவன்” என்றார்.

நல்லது, அவையெல்லாம் அர்த்தமற் றது என்பதைத் தவிர வேறில்லை!

மற்றும் ஒரு பெண்ணிடம் 'நீர் கிறிஸ்த வளா?' என்று கேட்டேன்.

98. அதற்கு அவள், “இங்கே பார் வாலிபனே! நான் ஒவ்வொரு இரவும்

மெழுகுவர்த்தி ஏற்றுகிறேன், நீயே புரிந்து கொள்” என்றாள்.

99. நீங்கள் இத்தனை மெழுகுவர்த் தியை ஏற்றுகிறதற்கும் அதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? நீ இந்த தேசத்தில் வாழ்வதற்கும் அதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? நீ ஒரு குறிப்பிட்ட சபையைச் சேர்ந்திருக்கிறதற்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? “ஒரு மனிதன் தேவனுடைய ஆவியினால் பிற வாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான்”. இதுவே நம்முடைய கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவின் எச்சரிப்பின் செய்தியாக இருக்கிறது.

100. என் நண்பர்களே, நான் உங்களை எவ்வளவாக நேசிக்கிறேன் என்று உங்க ளுக்குத்தெரியாது. நீங்கள் ஒருபோதும் நான்... நான் இந்த பிரசங்க பீடத்தில் நிற்பதனால், இதை சாதகமாகக் கொண்டு

உங்களைக் கடிந்துகொள்ள முயற்சிக்கி றேன் என்று நினைக்கவேண்டாம்.

101. ஆனால் இந்த இரவிலே நான் உங்களுக்கு சொல்லுகிறது என்னவெனில்; சுவிசேஷத்தைக் குறித்து எச்சரிக்கையா யிருங்கள். கிறிஸ்துவிடம் சீக்கிரமாய் ஓடுங்கள்! எல்லாவற்றையும் புறம்பே தள்ளிவிடுங்கள். யாரோ ஒருவர் (ஜோன்ஸ்) துவங்குவதற்காக காத்திருக்கா தீர்கள் சபையிலே துவங்குவதற்காக காத் திருக்காதீர்கள். இப்பொழுதே உங்களுக் குள்ளாக துவங்குங்கள். ஏனெனில் நீங்கள் எந்த பாவத்திற்குள் இவ்வளவு காலம் கட்டப்பட்டிருந்தீர்களோ, அதற்குள்ளாக, உங்களுடைய எஞ்சியிருக்கிற நாட்கள் முழுவதும் அடிமையாய் இருக்கும்படி தேவன் உங்களை ஒப்புக்கொடுக்கப் போகிற நேரம் வரப்போகிறது. ஆகவே எப்பேற்பட்ட கிரயம் செலுத்த வேண்டிய தாய் இருந்தாலும் பரவாயில்லை!

102. சமீப நாட்களுக்கு முன்பாக, ஒருவர் என்னிடத்தில் வந்தார். அவர் மிகவும் உத்தமமுள்ளவராய் இருந்தார். ஆனால் அவருடைய ஜீவியமோ பாவத்தில்இருந்தது. அவர் “சகோதரன் பிரன்ஹாம், நான் உத்தமமுள்ளவன். நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவா சிக்கிறேன்” என்றார்.

103. அதற்கு நான்,“நீ உத்தமனாயிருக் கிறாய் என்றால், உன் உத்தமத்தை நிரு பித்துக் காட்டும். உன் பாவத்தை விட்டு விலகு” என்றேன்.

அதற்கு அவர், “ஓ, அது என்னோடு அவ்வளவு ஒன்றாகி விட்டது” என்றார்.

அதற்கு நான், 'நீர் உத்தமன் என்றல் லவா நினைத்தேன்“ என்றேன்.

104. பாருங்கள், “நான் இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும்” என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் என்ன செய்ய வேண்டியிருந்தாலும் சரி, நீங்கள் மிக முக்கியமாய் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால், இயேசு கிறிஸ்துவண்டை வருவதே. மறுபடியும் பிறத்தலைக்காட்டிலும் முக்கியமான காரியம் ஏதாவது உண்டோ?

105. நீங்கள் ஒவ்வொருவரும் ஓர் நாளிலே இங்கிருக்கும் மண்ணுக்குள் புதைக்கப்பட்டு வெறும் மண்டை ஓடுகளாகவும் எலும்புக் குவியல்களாகவும் ஆகப் போகிறீர்கள் என்று அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் இங்கு அமர்ந்திருப்பது எவ்வளவு நிச்சயமோ அதைப் போலவே அங்கே அப்படியே ஆவதும் அவ்வளவு நிச்சயம். அது உண்மை. அப்படியென்றால், நீங்கள் எவ்வளவு உத்தமமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்? நான் சொல்வது புரிகிறதா? ஒருவேளை இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் உங்களுக்கு அப்படி நேரிட்டால், சரியாக அடுத்த வருடம்,

அடுத்த பன்னிரெண்டு மாதத்தில் இதே நேரத்தில் உங்களுடைய எலும்புகளிலே கொஞ்சம் சதை கூட இருக்காது. நீங்கள் மரித்த அடுத்த இருபத்தைந்து நிமிடத்திலே உங்களுடைய சரீரத்தில் ஒரு துளி ஜீவன் கூட இருக்காது. அது முதல் இந்த முடிவில்லா காலங்கள் முடிவடையும் வரைக்கும் கணக்குப் போட்டால், நீ ஒன்றுமே இல்லாமல் போவாய். ஆகவே நீ எந்த நிலைக்குள் போகிறாயோ, அதே நிலையிலே என்றென்றுமாயிருப்பாய். ஆகவே சகோதரனே,

106. நீ வெதுவெதுப்பாய் இருப்பாய் என்றால் அதுதான் நீ இருக்கக் கூடியவைகளிலேயே மிகவும் மோசமான நிலை. வெதுவெதுப்பான நிலை மிகவும் மோசமானது. “ஒன்று நீ அனலாயிருக்க வேண்டும் அல்லது குளிராயிருக்க வேண்டும். ஒன்று நீ என் பக்கமாக இருந்தால் உன் முழு இருதயத்தோடு இரு.

இல்லையெனில் எனக்கு எதிராயிரு” என்று இயேசு சொன்னார். நீ வெறும் நல்ல ஜீவியத்தை மாத்திரம் ஜீவிப்பாயானால் அது ஒருபோதும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. உன் சுயநீதியின் கந்தைகளைக் கொண்டு ஒருபோதும் நியாயத்தீர்ப்பின் நாளிலே நிற்க முடியாது. அது சரியே.

107. சகோதரனே “நல்லது, நான் இந்த குறிப்பிட்ட சபையை சார்ந்தவன்” என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் அதற்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நீங்கள் ஒரு சபையை சேர்ந்தவர்களாய் இருக்க வேண்டும் என்று விசுவாசிக்கிற வன் நான். அது பரவாயில்லை. ஆனால் இரட்சிப்புக்கும் அதற்கும் எந்த சம்பந்த மும் இல்லை.

# எங்களது ஆயுதத்தை எந்த நாட்டு ராணுவமும் தடுத்து நிறுத்த முடியாது !! உலக நாடுகளை மிரட்டும் புதின் !!...

---

டிசம்பர் 27, 2019 Tamil News



https://www.dailythanthi.com/News/World/2019/12/27145806/Putin-claims-Russia-is-world-leader-on-hypersonic.vpf

# உலக நாடுகளை ஒட்டுமொத்தமாக வியப்பில் ஆழ்த்தும் வகையில் புதிய ஆயுத சோதனையை முன்னெடுத்துள்ளது ரஷ்யா.

பதிவு: டிசம்பர் 27, 2019 14:58 PM
மாஸ்கோ


உலகில் ஹைப்பர்சோனிக் ஏவுகணையை வெற்றிகரமாக ஏவிய முதல் நாடு என்ற பெருமையை கைவசப்படுத்தியதாக ரஷ்ய அதிபர் புதின் அறிவித்துள்ளார். ரஷ்யாவின் ராணுவ உயர் அதிகாரிகளுடனான சந்திப்புக்கு பின்னர் முக்கிய ஊடகங்களிடம் தகவல் வெளியிட்ட ரஷ்ய அதிபர் புதின், உலகில் எந்த நாடும் இந்த ஏவுகணையை தடுத்து நிறுத்தவோ முறியடிக்கவோ முடியாது என தெரிவித்துள்ளார்.



ஹைப்பர்சோனிக் ஆயுதங்களில் நாங்கள் "தனித்துவமான" முன்னேற்றம் கண்டு உள்ளோம். எங்களைப் பிடிக்க மற்ற நாடுகள் முயற்சிக்கின்றன" என்று புதின் கூறினார்.

உலக வரலாற்றில் முதன் முறையாக அமெரிக்காவை விட ஒருபடி மேலே சென்று புதிய ஆயுதம் ஒன்றை ரஷ்யா கைவசப்படுத்தி யுள்ளது. மேலும், இந்த ஏவுகணையை உலகின் எந்த நாட்டு ராணுவமும் தடுத்து நிறுத்த முடியாது எனவும், வானில் இருந்து வெளியேறிய எரிகல் போன்று இது இலக்கை தாக்கி அழிக்கும் எனவும் புதின் தெரிவித் துள்ளார். ஷிர்கோன் என பெயரிடப்பட்டுள்ள

இந்த ஹைப்பர்சோனிக் ஏவுகணையானது மாக் 9–ன் வேகத்தை மிஞ்சும் எனவும் மணிக்கு சுமார் 7,000 மைல்களை தாண்டும் எனவும் புதின் அறிவித்துள்ளார்.



கடந்த 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவங்கார்டு ஹைப்பர்சோனிக் மற்றும் கின்ஷ்கால் ஹைப்பர்சோனிக் ஏவுகணை குறித்து புதின் முதன் முறையாக பேசி இருந்தார். அவங்கார்டு ஹைப்பர்சோனிக் ஏவுகணையானது ஒலியை விட 20 மடங்கு வேகத்தில் பாயும் எனவும் புதின் கூறினார். அதுமட்டுமின்றி, இலக்கை நெருங்க நெருங்க

ஆயுதத்தின் போக்கு மற்றும் அதன் உயரத்தை கட்டுப்படுத்த முடியும் எனவும் புதின் தெரிவித்துள்ளார்.




ரஷ்யாவைப் போலவே, அமெரிக்காவும் சீனாவும் ஹைப்பர்சோனிக் திட்டங்களில் ஈடுபட்டு உள்ளன. இந்த ஆண்டு தொடக் கத்தில் சீனா ஒரு ஹைப்பர்சோனிக் விமா னத்தை பரிசோதித்ததாகக் கூறியது, அதே நேரத்தில் அமெரிக்க விமானப்படை ஒரு ஏவு கணையை உருவாக்க லாக்ஹீட் மார்டினுக்கு ஒரு ஒப்பந்தத்தை வழங்கியுள்ளது.

# தேவனுக்கு முன்பாக மனந்திரும்புதல் அவருடைய கோபத்தை நிறுத்துகிறது

செய்தி: **63-07-24 தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை**

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**



நீங்கள் எப்பொழுதுமே தேவனுடைய ராஜ்யம் எங்குள்ளதோ, தேவனுடைய மகிமை எங்கு ஊற்றப்படுகிறதோ, அங்கு தங்கியிருக்க வேண்டும், **ஆவிக்குரிய விதமாக நீங்கள் இரவும் பகலும் போஷிக்கப்படக்கூடிய இடத்தில் தங்கியிருங்கள்.**

செய்தி: **வேறொருவரால் விளையும் பாதிப்பு,** 13.10.1962

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



# ரஷ்யபா

